<u>O.S.No. 465/2019</u>

<u>PW 3:</u> சுமையா சுரோகா பீவி தேதி 13.3.2026

<u>வாசா 3 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இறந்து போனவரும் நானும் உறவினர்கள் என்றால் அல்ல. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க சம்மன் வரவில்லை. தோல் பதனிடும் தொழில் நான் செய்து வருவதற்கான **GST** விவரங்களை கொண்ட கணக்கு பதிவேடு தாக்கல் செய்யவில்லை. எந்த எந்த வருடத்தில் எவ்வளவு வருமானம் எனக்கு வந்தது எவ்வளவு மூல பொருட்களை வாங்கினேன் என்பதற்கான விவரங்களை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்து போன சியாத்அலி என்ன பெயரில் தொழில் செய்து வந்தார் என்று எனக்கு தெரியாது. அவருடைய **RC** விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. **GST** தாக்கல் செய்ய எனக்கு தெரியும். **GST** எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை தாக்கல் செய்து வருகிறேன் எனக்கு எதுவும் தெரியாது என் கணவர் தான் செய்து வருகிறார். எனது கணவர் தான் மேற்படி தொழில் செய்து வருவதால் கடனை குறித்த விவரங்கள் நேரடியாக தெரியாது. நான் இறந்து போனவருக்கு உறவினர் என்பதால் அவருடைய மனைவி கேட்டு கொண்டதற்கிணங்க என்னுடன் சேர்ந்து வியாபாரம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.